219

Reg. No. M. 1534.

R. C. Training
School Magazine,
Trichinopoly.

7 - JUL 1932

திருச்சினப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதன விஷயப் பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கோத்து 22	ஜூன் 1932	மலர் 12

...ந்திராதிபர் குறிப்புகள்

3C
ணா21, N11PP.
N32.22.12
182291.

... போதனமுறை பயிலுவதற்காகச் சேர்த்
... ணவர்களுக்கு வழக்கமாய் சர்க்கார் உதவி
... ளத்தில் முக்கால் பாகமே கொடுப்பார்

ஆகவே,	செக்கண்டரி கிரேடு :	ரூ. 9—0—0
	ஹையர் எலிமெண்டரி :	ரூ. 7-14—0
	லோவர் எலிமெண்டரி	
	ஆதி திராவிடர் :	ரூ. 7-14—0
	இதர ஜாதியார் :	ரூ. 6—6—0

ஆனால் இந்த வருஷமும் இனிமேலும் சேர்க்கப்படும் மாண வர்களுக்கோ பின்வரும் விகிதப்படி உபகாரச் சம்பளம் உதவுவார் களாம். (N. B.—L. T. டிகிரிக்கும் செக்கண்டரி கிரேடுக்கும் உபகாரச் சம்பளம் முற்றிலும் நிறுத்தப்பட்டிருக்கிறது.)

ஆண் :	ஹையர் எலிமெண்டரி :	ரூ. 6—0—0
	லோவர் எலிமெண்டரி :	
	ஆதிதிராவிடர் :	ரூ. 6—0—0
	இதர ஜாதியார் :	ரூ. 5—0—0
பெண் :	ஹையர் } லோவர் } எலிமெண்டரி :	ரூ. 8—0—0

*** *** ***

அடுத்த ஜூலை மாதம் 1-உ புது மாணவர்கள் சேர்க்கப்படு வார்கள் ; ஹையர் கிரேடு மாணவருக்கு இம்மாதம் 30-உ வியா ழக்கிழமை காலை 8-மணிக்குப் பிரவேச பரீட்சை நடைபெறும். இவ்விடம் வந்து தலைமையாசிரியரின் முன் ஆஜராகாத எவருடைய பெயரும் பாடசாலை ரெஜிஸ்டரில் பதிவு செய்யப்படமாட்டாது.

இதுவரையில் பாடசாலையில் இருந்து வந்த பழக்க வழக்கங் களையும் சட்ட திட்டங்களையும் ஒருங்கே கூட்டி பாடசாலையில் சேர வரும் மாணவர்களுக்கு உதவியாகப் பிரசுரித்திருக்கிறோம். இவை நமது பழைய மாணவருக்கும் ஏனையோருக்கும் கூட பிர யோசனமாயிருக்குமாதலால் இவைகளை அடியில் அச்சிட்டிருக் கிறோம்.

*** *** ***

சென்ற மார்ச்சு மாதம் T. S. L. C. பரீட்சை எழுதிய நமது மாணவர்கள் அநேகமாய்த் தேறிவிட்டனர். முற்றிலும் தவறிப் போனவர்கள் லோவர் கிரேடில்மாத்திரமே, மற்றவர்கள் தவறின ஒன்றிரண்டு பாடங்களை அடுத்த வருஷம் எழுதி முற்றிலும் தேறின வர்களாகலாம். ஒவ்வொரு கிரேடிலும் பரீட்சை எழுதினவர்க ளுடையவும் தேர்ந்தவர்களுடையவும் தொகை பின்வருமாறு :—

182291

கிரேடு	எழுதினவர்கள்	தேர்ந்தவர்கள்	முற்றிலும் தவறினவர்கள்
செக்கண்டரி...	38	33	...
ஹையர் ...	39	37	...
லோவர் ...	35	25	7

மொத்தத்தில் நூற்றுக்கு 85 பேர் தேர்ந்திருக்கிறார்கள்.

நமது பழைய மாணவர்களில் இவ்வருஷம் பரீட்சை எழுதினவர்களுக்குள் 13 பேர் தேறிவிட்டனர்.

தேறினவர்களின் நாமதேயங்களும் அவர்கள் அடைந்துள்ள நூற்றுவிகித மார்க்குகளும் அடியில் காண்க.

***   ***   ***

இந்த மாதத்தோடு நமது சஞ்சிகையின் 22-ம் கொத்து முடிகிறது. புது சந்தா அடுத்த ஜூலை மாதத்தோடு துவக்கும். சந்தாதார் முன்பணம் அனுப்பாவிட்டால் அடுத்த கொத்தின் முதல் மலர் வி. பி. வழியாய் அனுப்பப்படும்.

***   ***   ***

இவ்வருஷம் நமது பாடசாலை துவக்கிய வெள்ளி ஜூபிலி வருஷம் என்று நமது பழைய மாணவர்களுக்குத் திரும்பவும் நினைப்பூட்டுகிறோம். அடுத்த அக்டோபர் மாதத்தில் ஆடம்பரக் கொண்டாட்டங்கள் நடத்த உத்தேசித்திருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தைத் தகுந்த விதமாய்க் கொண்டாடுவதற்கு நமது பழைய மாணவர் என்ன யோசனை கொடுக்கின்றனர்?

முதலில் இப்பத்திரிகையை வாங்கிப் படிப்பவர்கள் இன்னும் இதை வாங்காத பழைய மாணவர்கள் சந்தாதாராய்ச் சேரும்படி வற்புறுத்தட்டும். ஒவ்வொரு சந்தாதாரும் இன்னொரு சந்தாதாரைச் சேர்த்தால் சந்தாதாரின் தொகை இரட்டித்துவிடுமன்றோ?

***   ***   ***

7 - JUL 1932

1932-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் T. S. L. C. பரிட்சையில் தேறினவர்கள்

A. செகண்டரி கிரேட்

நெ.	ரிஜிஸ்டர் நெம்பர்	பெயர்		P. C. மார்க்கு
1	945	S. மரியஅருள்	...	46
2	946	P. மரியசற்குணம்	...	51
3	947	K. S. தவமணி	...	50
4	948	P. S. லூர்துசாமி	...	44
5	949	V. ஆரோக்கியம்	...	41
6	951	P. ஞானமாணிக்கம்	...	45
7	952	G. S. கிருஷ்ணமூர்த்திராவ்	...	36
8	953	V. சாமிநாதன்	...	46
9	954	V. தம்பிப்பிள்ளை	...	46
10	955	S. சிதம்பரம்	...	40
11	956	V. G. ஆரோக்கியசாமி	...	39
12	957	A. பாக்கியநாதன்	...	48
13	958	A. S. நடராஜன்	...	37
14	959	S. துரைராஜ் இஞ்ஞாசி	...	40
15	960	R. இஞ்ஞாசி	...	38
16	961	A. அந்தோனிசாமி	...	38
17	962	V. செல்லையா	...	45
18	963	L. இஞ்ஞாசிமுத்து	...	44
19	965	சூசைமாணிக்கம்	...	48
20	966	R. தேவசகாயம்	...	37
21	968	A. ராஜதுரைமணி	...	38
22	970	N. K. வெங்கடாசலம்பிள்ளை	...	38
23	971	K. M. செபஸ்தியான்	...	38
24	972	A. சின்னத்தம்பி	...	49
25	973	S. அடைக்கலம்	...	46
26	974	M. R. கிருஷ்ணசாமி	...	49
27	975	C. V. தாமோதரம்	...	44
28	976	V. S. மரியப்பிரகாசம்	...	44
29	977	T. N. கண்ணுசாமி	...	48
30	978	T. K. சங்கரன்	...	51
31	980	M. இஞ்ஞாசிமுத்து	...	44
32	981	M. அந்தோனிசாமி	...	39
33	982	T. நாராயணன்	...	44

B. ஹையர் கிரேட்

நெ.	ரிஜிஸ்டர் நெம்பர்	பெயர்		P. C. மார்க்கு
1	5957	A. சவரிமுத்து	...	34
2	5958	S. கஸ்பர்ராஜு	...	45
3	5959	J. ஏசுதாசன்	...	43
4	5960	G. ஜெகன்னாதன்	...	50
5	5961	P. அந்தோனிசாமி	...	39
6	5962	A. சூசைநாதன்	...	50
7	5963	S. அருளப்பன்	...	40
8	5964	K. நிகோலாஸ்	...	45
9	5965	P. S. அந்தோனி	...	41
10	5966	Y. இருதயம்	...	46
11	5967	G. சவரிமுத்து	...	43
12	5968	I. ஆரோக்கியம்	...	46
13	5969	G. அந்தோனிசாமி	...	44
14	5970	A. வியாகூலம்	...	45
15	5971	M. P. கனகரத்தினம்	...	52
16	5973	V. பிச்சை	...	37
17	5974	M. இஞ்ஞாசிமுத்து	...	40
18	5975	A. அருமைசுந்தரநாதன்	...	49
19	5976	S. அற்புதசாமி	...	55
20	5977	A. ஸ்தனிஸ்லாஸ்	...	49
21	5978	S. இருதயசாமி	...	42
22	5979	S. சூசைராஜு	...	39
23	5980	R. சூசைமாணிக்கம்ராஜு	...	41
24	5982	வில்லியம்கிரிஸ்தோபர்	...	41
25	5983	D. பெரியநாயகம்	...	49
26	5984	J. அந்தோனிஸாமி	...	43
27	5985	K. A. சவரிமுத்து	...	45
28	5986	T. S. அந்தோனிசாமி	...	42
29	5987	S. வியாகூலம்	...	37
30	5988	D. அந்தோனி	...	47
31	5989	V. A. ஆரோக்கியசாமி	...	32
32	5990	V. அந்தோனி	...	36
33	5991	A. G. சவரிமுத்து	...	39
34	5992	M. அருளப்பன்	...	43
35	5993	A. S. ஏசுதாசன்	...	48
36	5994	V. மதலைமுத்து	...	43
37	5995	S. ஜயம்பெருமாள்	...	45

C. லோவர் கிரேட்

நெ.	ரிஜிஸ்டர் நெம்பர்	பெயர்		P. C. மார்க்கு
1	9752	T. A. மரியசவரி	...	38
2	9753	A. சந்தணம்	...	49
3	9754	பொன்னம்பல அய்யர்	...	42
4	9755	S. தோமாஸ்	...	32
5	9756	S. செபஸ்தியன்	...	39
6	9757	D. மெடோஸ் மானுவேல்	...	38
7	9758	A. கப்ரியேல்	...	43
8	9759	M. விசுவாசம்	...	37
9	9760	V. சவரிமுத்து	...	33
10	9761	A. இராஜேந்திரம்	...	38
11	9762	C. இருதயம்	...	32
12	9763	P. A. சந்தியாகு	...	40
13	9764	M. பாக்கியநாதன்	...	31
14	9765	S. சவரியப்பன்	...	34
15	9766	R. ஆரோக்கியம்	...	31
16	9767	A. S. சூசை	...	40
17	9768	V. தாஸன்	...	31
18	9770	P. முத்து	...	38
19	9771	G. மரியசெங்கோல்	...	32
20	9774	V. M. அருணாசல அய்யர்	...	34
21	9781	K. V. அருளப்பன்	...	35
22	9782	P. கருப்பண்ணபிள்ளை	...	40
23	9783	C. செபஸ்தியன்	...	32
24	9784	S. மரியசூசை	...	38
25	9785	B. தேவராடி	...	33

D. பழைய மாணவர்கள்

நெ.	ரிஜிஸ்டர் நெம்பர்	பெயர்		P. C மார்க்கு
		சேகண்டரி கிரேட்		
1	936	M. கோவிந்தசாமி பிள்ளை	...	40
2	984	M. சூரியநாருயணன்	...	37
3	1272	M. R. கிருஷ்ணசாமி	...	40
		ஹையர் கிரேட்		
1	5997	C. R. கிருஷ்ணமூர்த்தி	...	28
2	6066	M. மரியசெல்வம்	...	46
3	6159	A. பலவேந்திரம்	...	37
4	6216	K. V. அருளப்பன்	...	42
5	6505	S. வியாகப்பன்	...	42
		லோவர் கிரேட்		
1	9787	T. இருதயசாமி	...	35
2	9790	S. மனுவேல்	...	29
3	9205	Y. பிச்சைமுத்து	...	33
4	9791	Y. சவரிமுத்து	..	28
5	9682-A	K. V. சீனிவாஸாசாரி	...	27

கல்வியின் இலக்ஷியங்கள்

கல்வி ஒழுங்காய் நடைபெறவேண்டுமாயின் அதற்குச் சில இன்றியமையாத முதற் கருவிகள் தேவை. அவையாவன: ஆசான், மாணுக்கன், பாடக்கிரமம், போதனு சாதனம் முதலியன. இக்கருவிகள் மாணுக்கனின் அபிவிருத்திக்காகவே அமைய வேண்டும். மாணுக்கனது தேர்ச்சியிலேதான் ஜனஸமூகத்தின் வளர்ச்சி அடங்கியுள்ளது; மாணுக்கனின் பயிற்சிக்குத் தக்கவாறுதான் ஜனஸமூகத்தின் பெருமையும் ஓங்கும். எனவே கல்விக்கும் ஜனஸமூகத்திற்குமுள்ள பரஸ்பர நெருங்கிய சம்பந்தத்தை எவரும் மறக்கவொண்ணுது. இந்த சம்பந்தம் நெருங்கவே கல்விக்கு ஒரு மெய்யான உரு ஏற்படுகின்றது; இன்றேல் அது பேச்சளவில் நின்ற கேவலம் ஓர் அர்த்தமில்லாத பொருளாகின்றது.

பாடக்கிரமம் அல்லது பாட திட்டம் என்பது மாணாக்கன் எவற்றையெல்லாம் பாடசாலையில் கற்றுக்கொள்ளவேண்டுமோ அவையனைத்தையும் குறிக்கும். ஆனால் அந்தப் பாட திட்டம் மாணாக்கன் கற்கவேண்டிய பாடங்களின் வரிசைக் கிரமத்தை மாத்திரம் குறிக்கவில்லை. அந்த நோக்கம் போதாது. அது மாணாக்கனது ஆழ்ந்த ஆராய்ச்சிக் குரியதும், புது விஷயங்களைக் கண்டுபிடிக்க உதவக்கூடியதும், மனத்திற்கும் புத்திக்கும் ஓய்வில்லாத அப்பியாசத்தை யளிக்க வல்லதுமான ஓர் ஏற்பாடாய் அமைதலே முறை. மனித வர்க்கத்திற்கு இலௌகிக அறிவையும், வைதீக ஞானத்தையும் ஊட்டி ஸமூகம் நலம்பெற வளர உதவும் கொள்கையைப் பெற்றதே பாட திட்டமாம்.

போதனா சாதனமாவது: கல்வியின்மேல் பிரியம் மாணாக்கனுக்கு ஏற்பட என்னென்ன உபாயங்கள் தேவையோ அவற்றையெல்லாம் குறிப்பதே. உதாரணமாக: பாடசாலைக் கட்டிட வசதிகள், விளையாட்டு ஸ்தலங்கள், வாசக சாலைகள், தேகாரோக்கிய நிலையங்கள் மற்றும் மாணாக்கன் கல்வியை அப்பியாசம் செய்யும்போது அதற்கு உதவியாகும் மாதிரிகள் படங்கள், முதலிய உபகரணங்களாம்.

இறுதியாய் ஆசிரியரே மாணாக்கரின் உயிரனையர் ஆகின்றார். கல்வியிலும், அநுபவத்திலும் சிறந்த ஆசிரியரானவர் மாணாக்கனது ஜீவியத்தையே மேன்மைப்படுத்தவேண்டியவராய் இருக்கிறார். எந்த ஆசிரியராயினும் ஏனை பேராசிரியர்களின் வழியைப் பின்பற்றி நிற்பவராவர்; அதாவது: தேசத்தின் பெரியாரான புலவோர், கவிவாணர், சாஸ்திரிகள், குருமார் முதலியவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒழுகுபவர். எனவே ஆசிரியர் ஸ்தானத்தை மகிமைப்படுத்தும் எந்த ஆடவரும் பெண்டிரும்கூட மெய்யாகவே உண்மை நெறியைக் கடைப்பிடிப்பவராகின்றார்.

இனி, கல்வியின் இலக்ஷியங்களை சுருங்கக்கூறின் அதை நான்கு பிரிவுகளாய் பிரிக்கலாம் (1) வித்தியா தத்துவங்களின் ஒருமைப்பாடு. அதாவது ஜன ஸமூகத்தின் மெய்யான முன்னேற்றத்திற்குரிய உலகஞானம், சாஸ்திர அறிவு, நல்லொழுக்கம். ஸமூக சேவைக்குரிய ப்ரஜாவுரிமையறிவு முதலியவற்றின் தேர்ச்சி, அவை ஒவ்வொன்றின் நோக்கத்திற்கும் அவை எல்லாவற்றின் நோக்கத்திற்கும் பேதமின்மை.

(2) மாணாக்கனின் தினசரி ஆஜர். கல்வியின் அடிப்படையான வழிப்பாடுகளில், மாணாக்கர்களை ஒழுங்காய் பாடசாலையில்

ஆஜர் படுத்த உதவும் கல்விமுறையே மிகவும் முக்கியமானதாகும். இந்த விஷயத்தில் பெற்றோரின் கடமையும் பொது மக்களின் பொறுப்பும் வெளிப்படை. கல்வியின் அபிவிருத்தியின் பொருட்டு பொதுமக்கள் தங்கள் அபிப்பிராயங்களை அடிக்கடி வெளிப்படுத்தக்கடமைப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக: கட்டாயக் கல்விச்சட்ட திட்டம், தொழிற்சாலை முதலிய ஸ்தாபனங்களில் இளைஞர் வேலை செய்வதற்குரிய நேர நிர்ணயம்; வோட் உரிமையைத் தீர்மானிப்பதற்குரிய வித்தியாயோக்கியதை முதலியவை சம்பந்தமாய் பொது மக்களின் அபிப்பிராயங்களுக்கும், அதற்கேற்றபடி அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கிரமம் தப்பாமல் பாடசாலைக்கு ஆஜர் படுத்த வேண்டியதற்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இது ஒரு முக்கியமான விஷயம். மேலும் பாடசாலை நடைபெறும் ஒழுங்கும், நேர்மையும், பிள்ளைகளைக் கவர்ந்து அவர்களிடத்தில் ஒழுங்கை அமையச்செய்வது மற்றொரு முக்கியமான விஷயமாகும்.

(3) பள்ளிக்கூடத்தின் தேவைக்குத்தக்கதோர் பாடதிட்டம். இதைத்தயாரிக்கும் கடமை பாடசாலையின் நிர்வாகிகள் அல்லது ஆசிரியரின் பெரிய கடமையாகும். அவர்கள் மூலமாகவே ஜனஸமூகத்தின் விருப்பங்கள் நிறைவேற விருக்கின்றன. அவை சரியாய் நிறைவேற வேண்டுமாயின் போதுமான திரவிய சகாயம் பாடசாலைக்கு அமையவேண்டும். அதன் பொருட்டு பொதுமக்கள் உழைக்கவேண்டியவர்களாகின்றனர். ஆனால் அந்த திரவியத்தைச் சேகரிப்பதில் எவ்வளவு சிரத்தையும் சாமார்த்தியமும் தேவையோ, அவ்வளவு அதைப்பயன் எய்துமாறு செலவிடுவதிலும் வேண்டும்.

(4) கல்வியின் அநுஷ்டானம்:—கல்வியின் இலக்ஷியங்களை உருவாக்குபவர் ஆசிரியரே. அவற்றை அநுஷ்டான முறைகளிலடக்குபவரும் அவரே. ஒரு மெய்யாசிரியரானவர் மாணாக்கனை வசப்படுத்தி, போதனாசாதனங்களை நற்ப்ரயோஜனமாக்கித் தாமே கல்வியின் உருவென மாணாக்கன் முன் நின்று அவனது ஜீவியத்தை உயர்த்தவந்த பேரொளியாய் விளங்குபவரும் அவரே; எனவே அத்தகைய ஆசிரியரின் கடமைகளை இனி விவரிப்பாம்.

(தொடரும்)

T. S. Ganapathi Ayier, Teacher,

R. C. Boarding & Training School, Trichy.

182291

திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

பொது வரலாறு

1. இந்தப் பாடசாலையானது 1907-ம் வருஷத்தில் திருச்சினாப்பள்ளி மேற்றிராசன ஆதீனத்தில், எலிமெண்டரி போதனா பாடசாலையாகத் தொடங்கி 1928-ம் வருஷத்தில் செக்கண்டரி கிரேட் போதனா பாடசாலையாய் உயர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலை சென்னை கல்வி இலாகா டைரக்டரால் R. C. Boarding and Training Institution என அங்கீகாரம் பெற்றுளது. துரைத்தனத்தாரின் திரவிய சகாயத்தை இப்பாடசாலை பெறுவது ஒரு சிறிதுதான்; எனவே இதனை நடத்துபவர்களுக்கே சகல நிர்வாக செலவுகளும் ஏனைப்பொறுப்புகளும் ஏற்படுகின்றன. இப்பாடசாலையை நடத்துபவர்கள் சென்னை கல்விச்சட்ட திட்டங்களை மதித்தும், தேசநலத்தின் பொருட்டு ஆசிரியர்களைப் பயிற்றியும், துரைத்தனத்திற்கு உதவிபுரிவார்களானாலும், பாடசாலையில் மாணுக்கர்களைச் சேர்த்தல், உதவிச்சம்பளம் (stipend) வழங்குதல், ரஜா உத்தரவளித்தல் முதலியவை சம்பந்தமாய் விசேஷ விதிகளை இயற்ற சுவாதீனம் பெற்றிருக்கின்றார்கள் (சென். கல். சட். அத் X பார்க்க).

2. இப்பாடசாலை, T. S. L. C. பரீக்ஷைக்கு செக்கண்டரி, எலிமெண்டரி ஹையர்கிரேட் மாணுக்கர்களைத் தயாரிக்கின்றது. எலிமெண்டரி கிரேட் ஆசிரியரின் தொகையையும், அவர்களது திறமையையும் அதிகப்படுத்துவதற்காக, எலிமெண்டரி கிரேடில் ஹையர் கிரேடுக்குமாத்திரம் இடமளிக்குமாறு, இதுகாறும் இங்கிருந்த லோவர் கிரேடை நிறுத்திவிட திருச்சினாப்பள்ளி மேற்றிராணியாண்டவரவர்களால் தீர்மானமாயிருக்கிறது. கல்லூரிப் படிப்புக்குத் தகுதிஎன்றாவது, ஸர்க்கார் உத்தியோகங்கள் பெற லாயக்கு என்றாவது ஒப்புக்கொள்ளப்பட்ட S. S. L. C. மாணுக்கர்கள் செக்கண்டரி கிரேடில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். யாதாம் ஒரு செக்கண்டரி பாடசாலையில் IV பாரம் அல்லது அதற்கு உயர்ந்தவகுப்பில் படித்துத் தேறின, டிரான்ஸ்பெர் ஸர்ட்டிபிகேட் பெற்றவர்களாவது அல்லது யாதாம் ஒரு உயர்தர எலிமெண்டரி பாடசாலையில் VIII வகுப்புப் படித்துத்தேறி, கல்வி இலாகாவால் E. S. L. ஸர்ட்டிபிகேட் பெற்றவர்களாவது எலிமெண்டரி ஹையர்கிரேடில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

3. முற்கூறிய இரண்டு கிரேடுகளிலும் பயிற்சிபெறவேண்டியகாலம் இரண்டு வருஷங்கள். ஆனால் யாதாம் ஒரு கல்லூரி

யில் இண்டெர்மீடியெட் படிப்புக்காகக் குறித்துள்ள காலத்தை யாவது பூர்த்திசெய்தவர்கள் செக்கண்டரி கிரேடில் ஒரு வருஷம் பயில சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறே, S. S. L. C. பரிக்ஷைக்கு ஆஜராகி ஆங்கிலத்தில் 25%-ம், இதரப்பாடங்கள் ஒவ்வொன்றிலும் 30%-க்குக் குறைவில்லாமல் அம்சங்கள் பெற்றிருப்பவர்கள் எலிமெண்டரி ஹையர் கிரேடில் ஒரு வருஷப் படிப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பெயர் பதிவு (Admission)

4. இப்பாடசாலையில் சேர்ந்துபடிக்க மனு, அதற்கென பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ள இப்பாடசாலை மனு நமூனாவில், அதில்கண்ட விவரப்படி பூர்த்திசெய்யப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். கத்தோலிக் மாணுக்கர்கள் விஷயமாய் அந்த மனு பங்குசுவாமிமார் மூலமாய் அனுப்பப்படுதல் வேண்டும்.

5. மனுதார் விண்ணப்பம் செய்துகொள்ளும்போதே, இப்பாடசாலையின் சட்டதிட்டங்களையும், ஒழுங்குகளையும், நிபந்தனைகளையும், ஏனைய அநுஷ்டானங்களையும் ஒப்புக்கொண்டு அவற்றிற்கேற்ப நடக்கத்தயாராய் இருப்பதாக வாக்களிப்பதுபோலாகும்.

6. செக்கண்டரி கிரேடில் 40 பேர்களையும், எலிமெண்டரி ஹையர் கிரேடில் 80 பேர்களையும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடாயிருக்கிறது.

7. உபகாரச்சம்பளம் (stipend) அல்லது கௌரதா சம்பளம் (scholarship) இவற்றைப்பற்றி மானேஜரால் யாதொரு வாக்குறுதி அல்லது நம்பிக்கை அளிக்கப்பட மாட்டாது. ஆனால் இதற்காக ஸர்க்காராலாவது அல்லது இதர நன்கொடையாளர்களாலாவது மானேஜர் வசம் ஒப்பிக்கப்படும் எந்தத்தொகையாயினும் மாணுக்கர்களுக்கே விநியோகிக்கப்படும்.

8. பெயர் பதிவுசெய்ய மாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்தாலும், அவர்களுக்கு ஸ்டைபெண்டு அல்லது ஸ்காலெர்ஷிப் முதலியவை வழங்குதலும் மானேஜருடைய இஷ்டத்தைப் பொறுத்தது.

9. பெயர் பதிவு செய்யும்காலத்தில் அபேக்ஷகர் தலைமை ஆசிரியரின் முன் ஆஜராகி, ப்ரவேச பரீக்ஷை எழுதவும், அதற்கு ஏற்பட்ட ப்ரவேச கட்டணம் ரூபாய் ஒன்று செலுத்தவும் தயாராய் இராவிடில் சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்கள்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணுக்கர்களனைவரும் பெயர் பதிவு செய்கையில் தலைக்கு ரூ. 10 வீதம் முன்பணம் (Deposit) செலுத்திவிடவேண்டும்.

போஜன—இருப்பிடவசதி (The Hostel)

11. கத்தோலிக் மாணுக்கர்களுக்கென்று இப்பாடசாலை யுடன் போஜன—இருப்பிடவசதி (Boarding House) ஏற்பா டாய் இருக்கிறது. பெயர் பதிவானவுடன் கத்தோலிக் மாணுக் கர்கள் சகலரும் இதில் சேர்ந்துவிடவேண்டும்.

12. முற்கூறிய போர்டிங்கில் கலியாணமானவர்கள் பொது வாய் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். ஆனுல் திருச்சிருப் பள்ளி மேற்றிராணியாண்டவர்களிடமிருந்து, எழுத்து மூலமாய் அநுமதிபெற்ருல் கலியாணமானவர்களும் சேர்த்துக்கொள்ளப் படலாம். அப்படி எத்தனை பேர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்பது, போர்டிங்கில் சேர்ந்துள்ள கலியாணமாகாதவரின் எண்ணிக்கையையும் தொகையையும் பொறுத்ததாகும்.

13. இங்கு பயிலவேண்டியகாலம் முழுவதற்கும் இது காறும், போர்டிங் கட்டணம் (இருக்கை இடவசதி, வெளிச்சம், வைத்திய சகாயம், ஸ்நானம், வண்ணுன், க்ஷவரகன் கூலி முதலி யன உள்பட) ரூ. 157-8-0 வசூலிக்கப்பட்டுவந்தது. ஆனுல் அது தற்போது, திருச்சிருப்பள்ளி மேற்றிராணியாண்டவர் அவர் களால் அன்புடன் ரூ. 136-8-0-க்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தொகையை தவணை ஒன்றுக்கு ரூ. 6-8-0 வீதம் 21 தவணை களில் செலுத்திவிடலாம். அந்தந்தமாதம் அல்லது மாதங்களுக் குரிய தவணைத் தொகையை முன்பணமாகவே (Advance) செலுத்திவிடவேண்டும்.

14. இங்கு போர்டர்களுடைய அதிகச்செலவுகளுக்காக யாதொரு முன்பணமும் கொடுக்கப்படமாட்டாது. ஆகவே இதை உத்தேசித்து போர்டர்களாவது அவர்களது போஷகர் களாவது போர்டிங் விசாரணைத்தலைவரிடம் (General Prefect) வேண்டிய ஒரு தொகையை (Deposit) கொடுத்துவைத்திருப்பது உசிதமாகும். (ஆனுல், பெயர் பதிவுகாலத்தில் செலுத்தும் முன் பணம் ரூ. 10 பிரத்தியேகம்).

சம்பளமும்—விசேஷ கட்டணங்களும் (Fees and Subscriptions)

15. சென்னை மாகாணத்திற்கு வெளிப்பட்ட இடங்களி லிருந்து பயில வருபவர்களிடமிருந்தும், சம்பளம் கொடுத்து படிப்பதென்ற நிபந்தனைப்படி ஸ்டைபெண்டு பெருத மாணுக்க ராக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களிடமிருந்தும் அல்லாமல் ஏனையோ ரிடமிருந்து யாதொரு சம்பளமும் இங்கு வசூலிப்ப தில்லை.

16. ஸ்டைபெண்டு பெறும் மாணுக்கராயினும், அது பெருத வராயினும் சகலரும், விளையாட்டு, கல்விச் சங்கம், பாடசாலை பத்திரிகை, வாசகசாலை, ஸ்கௌட் முதலியவற்றிற்காக விதிக்கப் படும் விசேஷ கட்டணங்களை குறித்தபடி, குறித்த காலத்தில் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும், கத்தோலிக் மாணுக்கர்கள், தங்கள் சபைத் திருநாட்கள் முதலியவற்றிற்காக விசேஷ கட்டணம் செலுத்தவேண்டியதாகும்.

17. மாணுக்கர்கள் பாடசாலைக் காலெண்டர், புத்தகசாலை, பொருட்சாலை, ஜாபிதா புத்தகங்கள், ரஜா நமூனுக்கள், பரீக்ஷை எழுதும் காகிதங்கள் முதலியவற்றிற்காக ஏற்படும் தொகையையும் கொடுக்கவேண்டும்.

ஆஜர் (Attendance).

18. பள்ளிக்கூட நாளானது காலை, மாலை, இருக்கைப்பொழு தெனப் பிரிக்கப்பட்டுள்ளது. காலந் தாழாமலும், கிரமமாயும் ஆஜராகுமாறு மாணுக்கர்கள் வற்புறுத்தப்படுகின்றனர்.

19. ரஜா இல்லாமல் ஏவரேனும், வகுப்புக்கு ஆஜராகாமல் இருக்கக்கூடாது. மாணுக்கருக்கு எந்த நாள் அல்லது நாட்க ளுக்கு ரஜா தேவையோ அதற்கு முன்னதாகவே தலைமையாசிரிய ரிடம் ஆஜராகி, அதற்கென ஏறபட்டுள்ள ரஜா நமூனுவைப் பூர்த்திசெய்து, அதை அவர் முன் ஆஜர்படுத்தவேண்டும்; தலைமையாசிரியர் அதில் கையொப்பமிடுமட்டும் ரஜா உத்தரவாக வில்லை என்றே அர்த்தம்.

20. எந்த மாணுக்கராவது ரஜாவின்றி ஆஜராகாமல் இருந் தால், ஆஜராகாத ஒவ்வொரு தினத்திற்கும், 4 அணு வீதம் அபராதம் செலுத்தவேண்டும். இன்றேல் அம்மாணுக்கரை மறுபடியும் வகுப்பில் சேர்த்துக்கொள்ளமுடியாது. தொடர்ந்து 3 நாட்கள்வரை உத்தரவின்றி வகுப்புக்கு ஆஜராகாவிடினும், அல்லது, ஒரு டெர்மில் (Term) பல தடவைகள் சேர்ந்து 5 நாட்கள் உத்தரவின்றி ஆஜராகாவிடினும், அத்தகைய மாணுக்கர் களை பாடசாலையிலிருந்து நீக்கிவிடலாம் (சென். கல். சட். 123 ii).

21. ஒரு தடவையில் 3 நாட்களுக்கு மேலும், வருஷத்தில் பத்து நாட்களுக்கு அதிகமாயும் ரஜா கொடுக்கப்படமாட்டாது; ஆனுல் வியாதியின் காரணமாய் வருஷத்திற்கு 1 மாதம் வரை ரஜா உத்தரவாகலாம்.

22. ஒரு மாதத்தில் நான்கு நாட்கள் காலந் தாழ்ந்து (Late) ஆஜரானுல், அது உத்தரவின்றி ஒரு நாள் ஆஜரில்லாததற் குச் சமமாகக் கருதப்படும்; அதற்குரிய தண்டனையும் ஏற்படும்.

23. வகுப்பில் எந்தப் பாட நேரத்திலாவது உத்தரவின்றி ஆஜராகாவிடில், அந்த நாள் முழுதும் ஆஜராகாததாகவே கவனிக்கப்படும்.

ஒழுக்கமும் நடத்தையும் (Discipline and Behaviour).

24. பெயர் பதிவான ஒவ்வொரு மாணுக்கரும், 50 பள்ளிக்கூட நாட்கள்வரை ஊர்ஜிதப்படாத (Probationary) மாணுக்கராகவே பாவிக்கப்படுவர். மேலும் எந்த மாணுக்கர் திறமையுள்ள ஆசிரியராகமாட்டார் எனத் தலைமையாசிரியர் கருதுவரோ அத்தகைய மாணுக்கர் பாடசாலையைவிட்டு நீக்கப்படுவர். அன்றியும், எந்த மாணுக்கராவது ஊக்கங்குன்றினவராகவும், மிக்கச் சோம்பேறியாயும், அல்லது துர்நடத்தையுடையவருமாக இருப்பரேல் அத்தகையோர் பாடசாலையைவிட்டு உடனே நீக்கிவிடப்படுவர்.

25. மாணுக்கர்கள், காலை மாலை இரு பொழுதிலும், வேலை தொடங்க 5 நிமிஷங்களுக்கு முன் ஆஜர் கொடுக்கவேண்டும். பெயர் கூப்பிடுகையில், பதிலளிக்காதவர்கள், காலந்தவறி (Late) வந்தவரெனக் கணிக்கப்படுவர்.

26. வகுப்பு ஆரம்பித்து அது முடியும்வரை, ஆசிரியருடைய உத்தரவின்றி, யாதொரு மாணுக்கராவது வகுப்பறையை விட்டு வெளிச் செல்லவும், தலைமையாசிரியரது உத்தரவின்றி பள்ளிக்கூடப் பிரதேசத்தைவிட்டு (premises) வெளியேகவும் அநுமதியில்லை.

27. வகுப்பு தொடங்குவதற்கு முன்னதாகவாவது, அல்லது இடை நேரத்திலாவது, பள்ளிக்கூடத்தில் தங்கியிருக்க நேரிடும்போது, மாணுக்கர்கள், அவர்களுக்காகக் குறித்தவிடத்தில் உபயோககரமான விதமாய்க் காலங் கழித்துக்கொண்டிருக்க வேண்டுமேயன்றி அங்குமிங்கும் சுற்றித்திரிவதும், உபாத்திமார்களின் அறை, புத்தகசாலை, பொருட்சாலை (மியூஸியம்) முதலிய அவர்களுக்குக் குறிக்கப்படாத இடங்கள்தோறும் சென்றலைவது கூடாது.

28. ஒவ்வொரு மாணுக்கரும், சுத்தம், மரியாதை பெருந்தன்மை முதலிய நல்லொழுக்க மாதிரிகைகளில் பெயர்வாங்க ஊக்கங்கொள்ளவேண்டும்; பள்ளிக்கூடப் பிரதேசத்தை அசுத்தமாக்கல், பாடசாலைக்குரிய சாமான்களுக்கு நஷ்டம் விளைவித்தல், ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு போடுதல், துர் வசனங்கள் முதலிய அநாகரீகமான பாஷைகளைப் பிரயோகித்தல் முதலிய

கௌரவதையற்ற, அற்பத்தனமுள்ள காரியங்களை அறவே யொழித்து விடவேண்டும்.

29. மாணாக்கர்களனைவரும், பாடசாலை விளையாட்டுகள், கல்விச் சங்கம், ஸ்கௌட் முதலிய வகுப்பறைக்குப் புறம்பே நடைபெறும் இயக்கங்களிலீடுபட்டுழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தலைமை ஆசிரியரது அநுமதியின்றி, மாணாக்கர்களது படிப்புக்கு இடையூறாகும் ஏனைச் சங்கங்களில் சேரவோ, பள்ளிக்கூட வேலைக்கும், ஒழுக்கத்திற்கும் விக்கினமுள்ளதான வெளி இயக்கங்களில் கலந்துகொள்ளவோ கூடாது.

30. எல்லா மாணாக்கர்களும். பிரதிதினக் கூட்டங்களிலும், நல்லொழுக்க போதனை நேரங்களிலும் ஆஜராய் இருத்தல்வேண்டும். ஆனால் கத்தோலிக் மாணாக்கர்கள் தினம் வேத உபதேச வகுப்புகளுக்கும் ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்கும் பிரசங்கத்துக்கும் தலைவெள்ளிக் கிழமை நன்மைக்கும் வகுப்புக்கு முன்னும் பின்னும் திவ்ய நற்கருணைச் சந்திப்புக்கும் கட்டாயம் ஆஜராக வேண்டும்.

வகுப்பு தொடங்கும்போதும் முடியும்போதும் ஜெபங்கள் சொல்லப்படுகையில், கத்தோலிக் அல்லாதவர் தங்கள் தங்கள் ஸ்தானத்தில் மௌனத்துடன் எழுந்து நிற்கவேண்டும். கத்தோலிக் மாணாக்கர்கள், தினந்தோறும் திவ்விய பூசைக்குப் போகவும், பாடசாலையில் ஸ்தாபித்துள்ள ஞானச் சபைகளில் சேரவும் வற்புறுத்தப்படுகின்றனர்.

I பூங்கோத்தின் வேண்டுகோள்.

(தேயிலைத்தோட்டத்திலே என்ற மெட்டு)

1. பூங்கொத்துத்தாசர்களே—நண்பன்
பாங்குடன் வந்தனம் தந்தேன் சீலர்களே.
2. பாரில் சிறந்தவரே—தோழன்
சீருடன் செப்பும் செய்தி தன்னைக்கேட்பீரே.
3. சந்தா செலுத்துவீரே—நல்ல
சிந்தைகொண்டு மேலும் சந்தாதார் சேர்ப்பீரே
4. சந்தா குறைந்ததாச்சு—யாவரும்
சந்தோஷமாகவே வாங்க இடமாச்சு.
5. உதவாப்பத்திரிகைகளை—ஆசிரியர்கள்
விதவிதமாக வாங்கி வாசிக்கிறார்.
6. என்னைமறந்து விட்டார்—அவர்கள்
நன்மைக்காக நான் இருப்பதை அறியார்.

7. எந்தன்பயன்கூறியே—தங்கள்
சொந்த நண்பர்கள் வாங்க முயற்சிப்பீரே.
8. ஆசிரியர்யாவரும்—என்னை
பாசமுடன் கொண்டுபயன் பெறச்செய்வீரே.
9. சந்தா அதிகமானுல்—நன்ருய்
தொந்திகொண்டு சொகுசாகவருகுவேன்.
10. அதிக பயனளிப்பேன்—மேலும்
இதமாகவே உங்களை மகிழ்விப்பேன்.
11. ஆரம்பாசிரியர்க்கு—நான்
சிறந்தகருவி எனச் செப்பத்தேவையில்லை.
12. உங்களுக்கே தெரியும்—எந்தன்
தங்கமான போதனுசங்கதியாவுமே.
13. ஆதலால் அன்பர்களே—என்னை
மேதினிமீதில் சிறக்கச்செய்வீர்களே.
14. சந்தாதிகம் சேர்ப்பீரே—உங்கள்
சிந்தை மகிழ சிறப்பேன் பின்பார்ப்பீரே.
15. செந்தமிழ் நண்பன் டி. எஸ்.—மிக்க
சுந்தரமாகவே சொல்லச் செய்த இந்த.
16. சேதியை ஆதரிப்பீர்—என்னை
மேதினி மீதில் என்றுமே மகிழ்விப்பீர் (பூங்கொ.)

இப்படிக்கு
அன்புமிக்க நண்பன் போதனுவிஷயப் பூங்கொத்து

குறிப்பு:—அவனியோர்புகழும் ஆரம்பாசிரியர்காள்! பூங்கொத்தின் வேண்டுகோட்கிணங்க, நாம் ஒவ்வொருவரும் புதிய சந்தாதார்களை சேரச்செய்வோமானுல், இதழ்கள் அதிகமாகி, விஷயங்கள் பெருகி, நமக்கு அதிக பயனளிக்க ஏற்றதாயிருக்குமல்லவா? ஆதலால், இன்றே ஒவ்வொருவரும் உற்சாகத்துடன், நமது பூங்கொத்தை முன்னிலைமைக்குக் கொண்டுவர முயற்சி எடுக்கவேணுமாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அன்றியும், நம் போதனுவிஷயப் பூங்கொத்து, இப்புவியின்கண் சிறப்புற்ருேங்கினுல், ஆரம்பாசிரியர்களாகிய நமக்கு அது அரும் பெரும் பெருமையல்லவா? என்பதையும் உணர்த்துகின்றேன்.

D. சேபஸ்தியான்,
ஹெட்மாஸ்டர்.
போர்டு ஸ்கூல் முத்தூர்.

182291

PERMISSU SUPERIORUM.
Imprimatur: ✠ AUGUSTINUS, S.J., *Ep. Trichinopolit.*